முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (23.12.2025) பெருநகர சென்னை மாநகராட்சி தலைமை அலுவலகமான ரிப்பன் மாளிகை வளாகத்தில் 74 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் புதிய மன்றக்கூடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, ஆர். கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், மரு. நா. எழிலன், ஆர். மூர்த்தி, எபிநேசர், எம்.கே. மோகன், துணை மேயர் மு. மகேஷ்குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே. சிற்றரசு உள்ளிட்ட நிலைக்குழு தலைவர்கள் மற்றும் மண்டலக்குழு தலைவர்கள், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (23.12.2025) சென்னையின் கலாச்சாரச் சின்னமான விக்டோரியா பொது அரங்கம் 32.62 கோடி ரூபாய் செலவில் தொன்மை மாறாமல் புனரமைக்கப்பட்டு திறந்து வைத்து, விக்டோரியா பொது அரங்க இணையதளத்தை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, ஆர். கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், மரு. நா. எழிலன், ஆர். மூர்த்தி, எபிநேசர், எம்.கே. மோகன், துணை மேயர் மு. மகேஷ்குமார், இந்து குழுமத்தின் இயக்குநர் என். ராம், நக்கீரன் கோபால், திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர் சுப. வீரபாண்டியன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே. சிற்றரசு, மண்டலக்குழு தலைவர்கள், நிலைக்குழு தலைவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

“என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி”

சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, டிச.24-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 8.12.2025 அன்று என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற தலைப்பில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற திமுக மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட செயல்திட்டத்தின் படி 24.12.2025 புதன்கிழமை அன்று சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள் விவரம்.

கொளத்தூர் கிழக்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 70அ , பாகம் 191, 192, 193, 194.

கொளத்தூர் மேற்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 64 , பாகம் 7 , இடம்: சீனிவாச நகர், 1வது குறுக்கு தெரு, கொளத்தூர் - 99.

மாலை: 4.30 மணி: வட்டம் 69 , பாகம் 128 , இடம்: 23வது தெரு, G.K.M.காலனி, சென்னை 82.

மாலை: 5.00 மணி: வட்டம் 69அ , பாகம் 224 , இடம்: சின்னசாமி தெரு, அகரம், சென்னை82.

மாலை: 5.30 மணி: வட்டம் 69அ , பாகம் 225 , இடம்: பார்த்தசாரதி தெரு, அகரம், சென்னை82.

துறைமுகம் கிழக்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 55 , பாகம் 44, 45, 49, 50. இடம்: எண்.85, ஏழுகிணறு தெரு, ஏழுகிணறு, சென்னை.

துறைமுகம் மேற்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 54, பாகம் 7, 8, 9 இடம்: சுப்புராயலு தெரு, கொண்டி தோப்பு, சென்னை.

எழும்பூர் வடக்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 78 , பாகம் 18,19,20.

எழும்பூர் தெற்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 61 , பாகம் 147, 149, 150 , இடம்: பூபதி நகர் தெரு, எக்மோர்

திரு.வி.க.நகர் தெற்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 73 , பாகம் 168, 169, 196.

மாலை: 4.30 மணி: வட்டம் 75 , பாகம் 73, 74, 75

வில்லிவாக்கம் கிழக்கு பகுதி

மாலை: 4.30 மணி: வட்டம் 97, பாகம்: 163, 164, 175. இடம்: ராமசாமி தெரு, செல்லிய;மமன் கோயில் தெரு, என்.எம்.கே.தெரு, குருவப்பா தெரு, திருபாச்சிஸ்வரர் தெரு.

மேற்கண்ட பாகங்களில் நடைபெறும் கூட்டங்களில் அந்தந்த தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட/ பகுதி / வட்ட நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள், BLA2, BDA, BLC ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் - மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர்பாபு அறிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

“அன்னம் தரும் அமுதகரம்” 307 வது நாள்!

எழும்பூர் வடக்குப் பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை,டிச.24–

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு ”அன்னம் தரும் அமுதக்கரங்கள் மாபெ ரும் திட்டத்தின் 307 ஆம் நாளான – கழகத்தலைவர் முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (23.12.2025), எழும்பூர் வடக்கு பகுதி: 1) வட்டம் 99, சண்முகராயன் தெரு, 2) வட்டம் 99அ, சாஸ்திரி நகர், கீழ்ப்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தை யும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்

தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடு வோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் – இதுதான் ஒரே இலக்கு! என்ற உறுதிமொழியை ஏற்று பொது மக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சொ.வேலு, வி. சுதாகர், பி.எம்.யாழினி, கோ.ஏகப்பன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத்திராசன், கோ.மணி, நிர்மலாதேவி. மாமன்ற உறுப்பினர்கள்: B.சுமதி, ராஜேஸ்வரி ஸ்ரீதர், பரி திஇளம்சுருதி, ஜி.தாமோதரன், எழும்பூர் வடக்கு தெற்கு பகுதி செயலாளர்கள்: வி.அபாய், தி. தயாளன், சு.மனோகர், ந. பாலு, ஆர். எம்.ரங்கநாதன், சி.சேகர், விவிஜய குமார், ஆர்.பாபு, டால்வின் எஸ்.அரி கிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல்.சுந்தர்ராஜன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: S. முரளி, R. ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக் குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

2025–26ஆம் ஆண்டு பணியிட மாறுதலுக்கான

பொதுக் கலந்தாய்வில் கலந்துகொள்ள 5.01.2026 வரை விண்ணப்பிக்கலாம்!

உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அறிவிப்பு!

சென்னை, டிச.24-

உயர்கல்வித் துறையின் கீழ் உள்ள அரசு கலை, அறிவியல், கல்வியியல், பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் பணிபுரி யும் ஆசிரியர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் நலன் கருதி 2025-26ஆம் ஆண்டு பணியிடமாறுதலுக்கான பொதுக் கலந்தாய்விற்கு (General Counselling) இணையவழியில் இன்று (24.12.2025) முதல் 05.01.2026 வரை விண்ணப்பிக்கலாம் என உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்களின் வழிகாட்டுதலின் படி, உயர்கல்வித் துறையின் கீழ் உள்ள அரசு கலை, அறிவியல், கல்வியியல், பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் நலன் கருதி 2025-26ஆம் ஆண்டு பணியிட மாறுதலுக்கான பொது கலந்தாய்வு நடத்திட ஆணையிடப்பட்டுள் ளது.

அதன்படி, உயர்கல்வித் துறையின் கீழ் இயங்கும் அரசு கலை, அறிவியல், கல்வியியல், பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர் கள், நூலகர்கள், உடற்கல்வி இயக்குநர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கு 2025-26ஆம் ஆண்டு பணியிடமாறுதலுக்கான பொது கலந்தாய்விற்கு (General Coun selling) இன்று (24.12.2025) முதல் 05.01.2026 வரை இணையவழி வாயிலாக விண்ணப்பிக்க வழிவகைச் செய்யப்பட்டுள்ளது.

இந்த பொது கலந்தாய்வில் கலந்துகொள்ள கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் கீழ் உள்ள பணியாளர்கள் www.dcetransfer.in மற்றும் www.nonteaching.dcetransfer.in என்ற இணையதள முகவரியிலும், தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கீழ் உள்ள பணியாளர்கள் www.tndotetransfer.in என்ற இணையதள முகவரியிலும் விண்ணப்பித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.

சென்னை தெற்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைக்குழு அமைப்பாளர் சைதை.சாதிக் தலைமையில் சைதை தொகுதியில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் பெருவிழாவில் சென்னை தெற்கு மாவட்ட செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரையாற்றி தொகுதிக்குட்பட்ட கிறிஸ்தவ குடும்பங்களை சார்ந்த 3000 மகளிர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். வழக்கறிஞர் வில்சன் எம்.பி. பங்கேற்று சிறப்புரையாற்றினார். பாதிரியார்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்டவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்தார்கள். இந்த விழாவில் சைதை தொகுதியை சேர்ந்த மகளிர் ஒன்றிணைந்து 400 கிலோ எடையுள்ள பிரம்மாண்ட கேக்கை வெட்டி கிறிஸ்துமஸ் விழாவை கொண்டாடினார்கள். பகுதி செயலாளர்கள் துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், மின்னல் கந்தப்பன், களக்காடி எல்லப்பன், மாமன்ற உறுப்பினர் தா.மோகன்குமார், வட்ட செயலாளர்கள் எஸ்.பி.கோதண்டம், சை.மு.சேகர், அட்கோ கமலநாதன், ஆரோக்யராஜ், க.மணி, வரதன், முருகன், மாநில துணை செயலாளர் எம்.எஸ்.அரிபாபு, மாவட்ட அமைப்பாளர்கள் நா.மணிகண்டன், கோ.பாஸ்கர், இளைஞரணி மாவட்ட துணை அமைப்பாளர் கோட்டூர் பிரகாஷ் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பொங்கல் திருநாளன்று நடைபெறவுள்ள சி.ஏ. தேர்வுகளை

வேறு தேதியில் நடத்தக்கோரி தயாநிதி மாறன் எம்.பி. கடிதம்!

இந்திய சார்ட்டர்ட் அக்கவுண்டண்ட்ஸ் நிறுவனத்திற்கு அனுப்பினார்!

சென்னை, டிச.24-

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகை அன்று நடைபெறவுள்ள சி.ஏ. தேர்வுகளை வேறு தேதியில் நடத்தக்கோரி கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் எம்.பி. கடிதம் எழுதியுள்ளார்.

இந்திய சார்ட்டர்ட் அக்கவுண்டண்ட்ஸ் நிறுவனம் (ICAI) 2026 ஜனவரி மாதத்தில் நடத்தவுள்ள சி.ஏ ஆரம்ப, இடைநிலை மற்றும் இறுதி தேர்வுகளின் அட்டவணை, பொங்கல் பண்டிகை நடைபெறும் அதே சமயத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இது பல மாணவர்களால் சுட்டிக்காட்டிய பின்பும் எந்த மறுபரிசீலனையும் நடைபெறவில்லை. தமிழ்நாட்டில் ஜனவரி 14 (போகி), 15 (பொங்கல்), 16 (திருவள்ளுவர் நாள்), 17 (உழவர் திருநாள்) ஆகிய நாள்கள் பண்டிகை நாள்களாக இருக்கும் நிலையில், தென்னிந்திய மாநிலங்களைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான மாணவர்களின் குடும்ப விழாக்கள், பயணத்திட்டங்கள் மற்றும் தேர்வு தயாரிப்பில் பாதிப்பு ஏற்

படும் நிலை உருவாகியுள்ளது.

ஜனவரி 14 அன்று மட்டும் பண்டிகைக்காக தேர்வு இல்லை என ஐசிஏஐ அறிவித்துள்ள போதிலும், முழு பொங்கல் விடுமுறை காலத்தைத் தவிர்க்காமல் தேர்வுகள் தொடர்வது மாணவர்களிடையே மிகுந்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இதனை தொடர்ந்து, இந்திய சார்ட்டர்ட் அக்கவுண்டண்ட்ஸ் நிறுவன த்தின் (ICAI) தலைவர் சரண்ஜோத் சிங் நந்தா அவர்களுக்கு கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன் எம்.பி. கடிதம் எழுதி, ஜனவரி 2026 சி.ஏ. தேர்வு அட்டவணையை மறுபரிசீலனை செய்து, தமிழ்நாடு உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்களில் கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகை விடுமுறை காலத்துடன் எதிர்ப்படாமல் வேறு தேதியில் நடத்தக்கோரி வலியுறுத்தியுள்ளார்.

அவரது கடிதத்தில், தற்போதைய ஐசிஏஐ அட்டவணையின்படி, பொங்கல் (ஜனவரி 15,2026) அன்றும் அதைத் தொடர்ந்து திருவள்ளுவர் தினம் (ஜனவரி 16), உழவர் திருநாள் (ஜனவரி 17) ஆகிய அரசு விடுமுறை நாட்களுடன் முக்கிய தேர்வுகள் அமைந்துள்ள தாகக் குறிப்பிட்டு ள்ளார்.

பொங்கல் திருநாள் கொண்டாட்டங்கள் தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், கேரளா உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்களின் கலாச்சார, சமய மற்றும் குடும்ப நிகழ்ச்சிகளு டன் தொடர்புடையவை என்பதால், இப்பகுதிகளைச் சேர்ந்த விண்ணப்பதா ரர்கள் தேர்வு மையங்களுக்கு பயணம் செய்வதிலும், தேர்வில் கலந்துகொள்வதிலும் கடுமையான சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொங்கல் பண்டிகைக்கு முன்பும் பின்பும் தேர்வுகள் அடுத்தடுத்து அமைந்திருப்பதால் தென்னிந்திய மாணவர்களுக்கு ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்க, அட்டவ ணையை மாற்ற வேண்டும் என்று கோரியுள்ளார். இத்தகைய மாற்றம் அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் நியாயமான, சமமான தேர்வு வாய்ப்புகளை உறுதி செய்யும் என்றும், தென்னிந்திய மாநிலங்களின் கலாச்சாரங்களுக்கு உணர்வுபூர்வமான அணுகுமுறையை வெளிப்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டு ள்ளார்.

“இந்த மாற்றம் சார்ட்டர்ட் அக்கவுண்டன்சி தொழிலில் ஆர்வமுள்ள தென்னிந்திய மாணவர்களின் கனவுகளுக்கு மதிப்பளிக்கும்” என்றும் தயாநிதி மாறன் தெரிவித்துள்ளார். இந்தக் கோரிக்கைகளை ஐசிஏஐ பரிசீலித்து, விரைவில் பதிலளிக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தலைமை: ஜி.கே.ரவி [எ] விவேகானந்தன்! புனித தோமையார் மலை வடக்கு ஒன்றியம்

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

மீ.அ.வைதியலிங்கம் – எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. – இ. கருணாநிதி எம்.எல்.ஏ. கண்டன உரை!

சென்னை,டிச.24

மகாத்மா காந்தியின் ஊரக வேலை வாய்ப்புத்திட்டம், 100 நாள் அரசு வேலை திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க அரசையும், ஒத்து ஊதும் அ.தி.மு.க வையும் கண்டித்து காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க புனித தோமையார் மலை வடக்கு ஒன்றியம் மதச்சார்பற்ற முற்போக்கு கட்சிகளின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று (24.12.2025 புதன்கிழமை) காலை 9.00 மணிக்கு சிட்லப் பாக்கம் ஏரிக்கரை அருகில் புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய செயலாளர் ஜி.கே.ரவி [எ] விவேகானந்தன் தலைமையில் நடைபெறுகிறது.

காங்கிரஸ் - பொழிச்சலூர் ராமு, ம.தி.மு.க. - க. லிங்கா பாண்டியன், சி.பி.எம்.- எம். தாமோதரன், வி.சி.க. - முடிச்சூர் பாஸ்கர், சி.பி.ஐ. - இ. பாலாஜி, மா.இ.த.இ.க. - அ.இர.சிவகாமி, ம.ம.க. சேக் அப்துல் காதர் ஆகியோர் முன்னிலையில் வகிக்கின்றனர்.

மாவட்ட காங்கிரஸ் தலைவர் ஆர் எஸ் செந்தில்குமார் வரவேற்புரையாற்றுகிறார்.

இம் பெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக தலைமை தீர்மானம் குழு செயலாளர் மீ.அ. வைத்தியலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். ஆர்.ராஜா, இ. கருணாநிதி ஆகியோர் கண்டன உரையாற்றுகின்றனர்.

இதில் மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ. காமராஜ், எம்.யாக்கூப், மா.வை. மகேந்திரன், இரா.வேல்முருகன், ஏ.ராஜ்குமார், எஸ். முகம்மது பேக், ப.சாமுவேல் எபினேசர், த.தமிழரசன், கே.எஸ். ஜாகிர் உசேன், பா.முத்தையன், இளமாறன், அன்பு, எம்.பி. உதயச்சந்திரன், டி. எஸ்.பால்நியூலின், லட்சுமணன், ஆதிமாறன், பரிதி இளம் சுருதி, முகமது ரபிக், பத்மபிரியா, வே. கருணாநிதி, ஜோசப் அண்ணாதுரை, டி. காமராஜ், எஸ்.இந்திரன், த. ஜெயக்குமார், எஸ். சேகர், ஆர்.நடராஜன், ஏ. கே.கருணாகரன், இ.எஸ்.பெர்ணாட், ஆர்.சுரேஷ், இரா. பொன்ராம், ஆ. தமிழ் மாறன், எஸ்.நவீன், ஆர்.எஸ். கிருத்திகா தேவி, கா. தேவேந்திரன், எஸ். சதீஷ், ஆர்.எஸ்.சங்கர், முரஞ்சன், பிரசாத் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் அனைவரும் பங்கேற்கின்றனர்.

இறுதியில் கழக ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அ.சுனில் மேத்யூ, ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் ஜி.கே. வி.பிரபாகரன் ஆகியோர் நன்றி கூறுகின்ற னர்.

தேசிய விவசாயிகள் தினத்தை முன்னிட்டு நேற்று (23.12.2025) வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வத்தை சென்னையில், விவசாய சங்கப் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் சந்தித்து வாழ்த்து பெற்றனர். உடன் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மை இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி.குமரவேல்பாண்டியன் ஆகியோர் உள்ளனர்.

சென்னை மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி, கழக வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர சீராய்வுக்கான வழக்கறிஞர் அணியின் செயல்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம், நேற்று (23.12.2025) மாலை மாவட்டக் கழக அலுவலகத்தில், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வே. தேவேந்திரன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கினார். இதில் மாவட்ட வழக்கறிஞர்களுக்கு திமுக சட்டத்துறையினரால் வழங்கப்பட்ட ”கழக வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர சீராய்வுக்கான வழக்கறிஞர் அணியின் செயல்பாட்டு விதிகள் நகல்கள் வழங்கப்பட்டன. இதில் வழக்கறிஞர் அணியைச் சார்ந்த சியாமளா, பாலசந்தர், கமலக்கண்ணன், ரகுராம் மற்றும் மாவட்ட நிர்வாகிகள், கழக வழக்கறிஞர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.